පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක: 79

ආයතනයේ නම: පරිසර අමාත්‍යාංශය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்: 79
நிறுவனத்தின் பெயர்: சுற்றாடல் அமைச்சு

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன் வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) இன் கீழ் நிறுவனங்களிற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary Series No: 79
Name of the Institution: Ministry of Environment

Submission of observations of the Hon. Minister in charge of the institutions and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 79

நிறுவனத்தின் பெயர் : சுற்றாடல் அமைச்சு

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன் வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) இன் கீழ் நிறுவனங்களிற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைப்பாடுகள்	குறைப்பாடுகளை சரி செய்யும் பொருட்டு நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் / நடப்பு நிலை
முதலாவது பிரிவு	
கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் : 02/2021(ii) இன் பிரகாரம், நடப்பு செயன் முறைக்குப் புறம்பாக உத்தியோகத்தர்கள் பணிக்கு அழைக்கப்பட்டமையால் இக் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்கும் பொருட்டு தேவையான தகவல்களை ஒன்று திரட்டுவதில் தாமதமேற்பட்டமையால் ஒரு மாத காலப் பகுதியினுள் பதிலளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனினும், கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமைக்கான சந்தர்ப்பங்கள் காணப்பட்டிருந்தன.	தலைமை உள்ளக கணக்காளரது அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
வருடாந்த பொருள் கணிப்பாய்வு மூலம் வெளிக் கொணரப்பட்ட மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய விதப்புரைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவில்லை.	முன் மொழிவுகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.
அனைத்து வாகனங்களினதும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் கைவசம் இல்லை.	அமைச்சுக்கு உரித்தானதாக 53 வாகனங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் 50 வாகனங்கள் தொடர்பாக உரிமையை உறுதிப்படுத்தும் கடிதங்கள் கைவசம் காணப்படுகின்றன. உரிமையை உறுதிப்படுத்தும் கடிதங்கள் கைவசம் காணப்படாத வாகனங்களின் விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. i. KO 8812 ஐ உடைய மோட்டார் வாகனம் - நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சுக்கு உரித்தாகவிருந்ததுடன், மகாவலி பிரிவினால் தற்காலிகமாக இவ் அமைச்சுக்கு பெறப்பட்டுள்ளது. சட்ட பூர்வமாக சுற்றாடல் அமைச்சுக்கு கையளிக்குமாறு கோரிக்கை முன் வைக்கப்பட்டிருப்பினும், அது தொடர்பாக விருப்பு தெரிவிக்கும் கடிதம் இது வரை கிடைக்கவில்லை. ii. GW 1326 ஐ உடைய ஜீப் வண்டி -

	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழ் காணப்பட்ட மகாவலி ஆற்றுப் பள்ளத்தாக்கை அண்டிய விவசாயக் குடி மக்களை காலநிலை மாற்றங்கள் மூலமான பாதகமான தாக்கங்களுக்கு இயைபாக்கமடையச் செய்யும் கருத்திட்டத்தின் உத்தியோகபூர்வமான பணிகளுக்கென ஈடுபடுத்தப்பட்டிருந்த இவ் ஜீப் வண்டி, அன்றிருந்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், கருத்திட்டத்தின் செயற்பாடுகள் நிறைவடைந்த பிற்பாடு சுற்றாடல் அமைச்சுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. இவ் ஜீப் வண்டியை கையேற்கும் பொருட்டு பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்டமிடல் அமைச்சுக்கு கோரிக்கை முன் வைக்கப்பட்டிருப்பினும், அவ் விடயம் தொடர்பாகப் பதில் கிடைக்கவில்லை. அமைச்சின் பெயர் மாற்றமடைந்தமையால் இவ் ஜீப் வண்டியை கையேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மோட்டார் வாகனங்களை கையேற்றல் தொடர்பாக கொம்ப்ரோலர் ஜெனராலினது ஆலோசனையின் பிரகாரம், 2018.10.10 ஆந் திகதிய சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 03/2018 இன் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. iii. KB 7120 ஐ உடைய மோட்டார் வாகனம் - அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு கையளிக்குமாறு கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. இது வரை சுற்றாடல் அமைச்சுக்கு கையேற்றல் தொடர்பாக விருப்பு முன் வைக்கப்படவில்லை. இதனால், மோட்டார் வாகனங்களை கையேற்றல் தொடர்பாக கொம்ப்ரோலர் ஜெனராலினது ஆலோசனையின் பிரகாரம், 2018.10.10 ஆந் திகதிய சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 03/2018 இன் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.	நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
அனைத்து வாகனங்களிலும் தேசிய சின்னம் வரையப்படவில்லை.	தேசிய சின்னம் வரையப்படாத வாகனங்களில் தேசிய சின்னத்தை வரைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
வாகனங்கள் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டு 08 மாதங்களுக்குக் குறைவான காலப் பகுதியில் அகற்றப்படவில்லை.	1. 65 – 1578 ஐ உடைய ஜீப் வண்டி - விலைகள் கோரப்பட்டு, பழுதுபார்ப்புகளுக்கென HI Tech Motors நிறுவனத்துக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

	2. HQ 4331 ஐ உடைய ஜீப் வண்டி - அவ் வண்டியின் உள் நாட்டு முகவர்களான United Motors நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அதிக செலவை ஏற்க வேண்டிய நிலை ஏற்படுவதால் பழுதுபார்ப்புகளை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்படவில்லை. 3. HK 8894 ஐ உடைய மோட்டார் வண்டி - பாவனையிலிருந்து ஒதுக்கப்படவுள்ளது. இதற்கென விலை மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது. 4. KK 9635 ஐ உடைய மோட்டார் வண்டி - பாவனையிலிருந்து ஒதுக்கப்படவிருப்பதுடன், இதற்கென விலை மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது. 5. KB 7120 ஐ உடைய மோட்டார் வண்டி - இவ் அமைச்சின் கீழ் செயற்படுகின்ற கருத்திட்டமொன்றின் நிதியங்களின் ஊடாக பழுதுபார்ப்புகள் மேற்கொள்ளப்பட்டு, அக் கருத்திட்டத்தின் தேவைகளுக்கென ஈடுபடுத்தப்பட்டுள்ளது. 6. KH – 9235 ஐ உடைய மோட்டார் வண்டி - பாவனையிலிருந்து ஒதுக்கப்படவிருப்பதுடன், இதற்கென விலை மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது. 7. CAC – 0172 ஐ உடைய மோட்டார் வண்டி - பழுதுபார்ப்புகளுக்கென லியனகே மோட்டர்ஸ் நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதுடன், பழுதுபார்ப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 8. GI – 4576 ஐ உடைய கெப் வண்டி - பழுதுபார்ப்புகள் முன்னெடுக்கப்பட்டு ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
அரசின் வாகன விபத்துகள் தொடர்பாக நி. ஒ இன் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	கீழே குறிப்பிடப்பட்டுள்ள இலக்கங்களையுடைய வாகனங்கள் அவசர விபத்துகளுக்கு உள்ளாகியிருப்பதுடன், அவை தொடர்பாக முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் கீழே குறித்துக் காட்டப்பட்டுள்ளன. (i) CAC 0172 ஐ உடைய மோட்டார் வாகனம் அவசர விபத்துக்கு உள்ளாகியிருத்தல் தொடர்பாக 2024.07.22 ஆந் திகதி நி. ஒ. 104 (4) இன் கீழ் நட்டம் தொடர்பான இறுதி அறிக்கை அரச நிதித் திணைக்களத்துக்கு முன் வைக்கப்பட்டுள்ளது.

	(ii) KO 8812 ஐ உடைய மோட்டார் வாகனம் 2023.08.17 ஆந் திகதி அவசர விபத்துக்கு உள்ளாகியுள்ளது. இம் மோட்டார் வாகனம் பழுதுபார்ப்புக்கென HI Tech Motors நிறுவனத்துக்கு கையளிக்கப்பட்டுள்ளது. அந் நிறுவனத்தினால் பழுதுபார்ப்புகளை மேற்கொள்ள வேண்டிய பாகங்கள் பரீட்சிக்கப்பட்டு, 2023.12.10 ஆந் திகதி விலை மதிப்பீடுகள் பெறப்பட்டிருப்பதுடன், அன்றே நி. ஒ. 104 (04) பரீட்சிப்பு அறிக்கையை முன் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், 2024.01.12 ஆந் திகதி அரச நிதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு பூரண அறிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. (iii) KX 7689 ஐ உடைய மோட்டார் வாகனம் 2023.05.04 ஆந் திகதி விபத்துக்கு உள்ளாகி, அது தொடர்பாக நி. ஒ. 104 (4) பரீட்சிப்பு அறிக்கை 2023.12.04 ஆந் திகதி கையளிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், 2023.12.18 ஆந் திகதி அரச நிதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு பூரண அறிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. (iv) KX 7665 ஐ உடைய மோட்டார் வாகனத்தின் வலப் வலப் புறப் பக்கக் கண்ணாடி உடைந்திருப்பதுடன், இன்றளவிலும் லியனகே மோட்டர்ஸ் நிறுவனத்தினால் அப் பக்கக் கண்ணாடி பழுதுபார்க்கப்பட்டுள்ளது. நி. ஒ. 104 (4) இன் கீழ் நட்டங்கள் தொடர்பான இறுதி அறிக்கையை முன் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
குறித்த திகதியைத் தாண்டி ஏனைய நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.	தற்சமயம் குறித்த திகதியைத் தாண்டி பிற நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்கீடு விடுவிக்கப்படுவதில்லை.
பொது வைப்புகள் கணக்கில் காலாவதியான வைப்புகள் தொடர்பாக நிதி ஒழுங்கு விதிகள் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	நிதி ஒழுங்கு விதிகள் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதுடன், "சொபாதம் பியச" கட்டிடம் தொடர்பான தங்க வைத்தல் கட்டணங்களை விடுவிக்க வேண்டியுள்ளது. கட்டிட நிர்மாணிப்புடன் தொடர்புடையதாக இறுதிப் பட்டியலுக்கான கொடுப்பனவு செலுத்தப்பட்ட பிற்பாடு தங்க வைத்தல் பணத் தொகையை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
அங்கீகரிக்கப்பட்ட உச்ச வரம்பை மீறும் வகையில் பணியாட் தொகுதியினர் ஆட் சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர்.	2020.12.15 ஆந் திகதிய இலக்கம் 02/02/ADM/විවිධ-10 ஐ உடைய கடிதத்தின் மூலம் பணித் தேவையின் பிரகாரம் சுற்றாடல் அமைச்சுக்கென தற்சமயம் அனுமதிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் எண்ணிக்கையைக் காட்டிலும் 30 அலுவலர்களுக்கு அனுமதி வழங்குமாறு, நி. ஒ. 71 இன் கீழ் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. மேலும், மாவட்டச் செயலாளர்களினதும் வேண்டுகோளின் பிரகாரம், ஒவ்வொரு பிரதேசச் செயலகங்கள் தொடர்பாகவும் சுற்றாடல்

	உத்தியோகத்தரொருவரை நியமிக்குமாறு முன் வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை கருத்திலெடுத்த வண்ணம் எனது இலக்கம் 02/02/ADM/விவி-10 மற்றும் 2021.05.04 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் சுற்றாடல் அமைச்சு தொடர்பாக 391 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இணைப்பு செய்யும் பொருட்டு நி. ஒ 71 இன் கீழ் விண்ணப்பம் முன் வைக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் இலக்கம் DMS/CM/11 மற்றும் 2023.01.25 ஆந் திகதிய கடிதத்தின் மூலம், 299 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொடர்பாக இவ் அமைச்சுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரச நிர்வாக, உள் நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் இவ் அமைச்சுக்குப் 597 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் புதிதாக இணைப்பு செய்யப்பட்டிருப்பினும், 299 உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டிருத்தல் பிரச்சினைக்குரிய விடயமாகக் காணப்படுவதால் அரச சேவையின் ஆட் சேர்ப்பு செயற்பாட்டை பகுப்பாய்வு செய்யும் குழுவுக்கு மேலதிக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொடர்பாக அனுமதியை வழங்குமாறு அல்லது இன்றேல் பிற உத்தியோகபூர்வ பணியிடத்தில் நிலை நாட்டுதல் தொடர்பாக எதிர்ப்பு காணப்படுவதில்லையென இலக்கம் ADM/02/02/01 மற்றும் 2023.08.14 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.
இரண்டாவது பிரிவு	
திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகள் மூலமாக வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50% ஐ பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது.	தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் அடிப்படையில் பல்வேறு கொடுப்பனவுகள், அரச செலவைக் கட்டுப்படுத்தும் நோக்கில் திட்டமிடப்பட்ட பயிற்சிகளை வழங்கும் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டன. அன்றளவில் நாட்டில் நிலவிய எரிபொருள் பற்றாக்குறை காரணமாக உத்தியோகத்தர்கள் பணிகளில் ஈடுபடும் செயற்பாடுகள் சாதாரண நிலைக்குப் புறம்பாக முன்னெடுக்கப்பட்டமையால் தொடர்புடைய வருட காலப் பகுதி தொடர்பாக திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்ட வகையில் அமையப் பெற்றிருந்தது.
நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியான / ஒப்புதலளிக்க மறுக்கின்ற / பாதகமான மட்டத்தில் நிலவியது.	அமைச்சின் கணக்குகள் தொடர்பாக முனைப்பழியுள்ள அபிப்பிராயமே முன் வைக்கப்பட்டுள்ளது. இவ் அபிப்பிராயத்திற்கான மூலாதாரம், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விபரமான அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதுடன், இது தொடர்பாக முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் / நடப்பு நிலை தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. (i) சுற்றாடல் அமைச்சுக்கு உரித்தாகாத காணிகள் தொடர்பாக ஏற்கட்ட செலவுகள் அமைச்சின் கணக்குகளில் சுட்டிக் காட்டப்படுவதை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

	(ii) சுற்றாடல் அமைச்சு நிலை நாட்டப்பட்டுள்ள கட்டிடத்தை சட்ட ரீதியாக கையளிக்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. காணியை சட்ட ரீதியாக கையகப்படுத்திய பிற்பாடு, அது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். (iii) தீர்க்கப்படாத முற் பண மீதியான ரூபா 260,361.36 ஆன பணத் தொகை முற்றாகத் தீர்க்கப்பட்டுள்ளது. (iv) கையிருப்புப் புத்தகம் மற்றும் ஏனைய ஆவணங்கள் புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. (v) அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களது தகவல்கள் உள்ளடங்கிய பிணை ஆவணம் பராமரிக்கப்பட்ட வண்ணமுள்ளது.
பொதுக் கணக்குக் குழுவின் பரிந்துரைகள் / கட்டளைகள் செயல்படுத்தப்படவில்லை.	2021.11.19 ஆந் திகதி நடைபெற்ற பொதுக் கணக்குக் குழுக் கூட்டத்தின் போது வழங்கப்பட்ட ஆணைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன. பொதுக் கணக்குக் குழுவின் ஆணையின் பிரகாரம், அக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென ஆணையிடப்பட்ட அனைத்து அறிக்கைகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. செயலாற்றுகை குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. 1. கண்டி நகரில் பாதகமான வாயுக்களின் ஒன்று சேர்க்கை, ஏற்கப்பட்ட செறிவைக் காட்டிலும் உயர் மட்டப் பெறுமதியை எய்தியிருப்பதாக ஆராய்ச்சி அறிக்கைகள் முன் வைக்கப்பட்டுள்ளமையால் அதனை கட்டுப்படுத்தும் பொருட்டு தயாரிக்கப்பட்டிருந்த நிகழ்ச்சி இன்றளவிலும் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்ட வண்ணமுள்ளன. 2. இலத்திரனியல் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக, கொரியாவின் கையளிப்புடன் கூடியதாக இலத்திரனியல் கழிவு முகாமைத்துவக் கருத்திட்டமொன்றை நாட்டினுள் செயற்படுத்தும் முகமாகத் திட்டங்கள் வகுக்கப்பட்ட வண்ணமுள்ளன. 3. சுற்றாடல் அமைச்சின் கீழ் நிலை நாட்டப்பட்டுள்ள இலங்கை காலநிலை நிதியம் தனியார் கம்பனியின் 2020 ஆம் ஆண்டு கால கட்டத்துக்குரிய நிதிக் கூற்றுக்கள், பிற்பாடு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன் வைக்கப்பட்டுள்ளது. 4. உத்தேச ஆபத்து மிக்க ஆக்கிரமிப்புத் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் இந் நாட்டுக்கு வருகை தருவதைத் தடுக்கும் மற்றும் அத் தாவரங்கள், விலங்கினங்களை அழிக்கும் பொருட்டு புதிதாக சட்டங்களை தொகுக்கும் பொருட்டும் மிகப் பொருத்தமான நிறுவனமான வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின்

	செயலாளருக்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. 5. காலநிலை மாற்றங்களை குறைக்கும் கூட்டிணைப்பு கருத்திட்டத்தினால் கையளிக்கப்பட்ட கணினிகளை இயக்கத் தேவையான தொழில்நுட்ப உதவிகள் பெறப்பட்ட வண்ணமிருப்பதுடன், இன்றளவிலும் இக் கணினிகள் பயன்படுத்தப்பட்ட வண்ணமுள்ளன. 6. Climate Technology Center and Network (CTCN) நிறுவனத்தினால், 2017 ஆம் ஆண்டில் கருத்திட்ட முன் மொழிவு கோரப்பட்டு அதன் பிரகாரம் முன் வைக்கப்பட்ட 03 கருத்திட்ட முன் மொழிவுகளிடையே மிகப் பொருத்தமான முன் மொழிவான குருணாகலை நகர சபையினால் முன் வைக்கப்பட்ட "ஸ்மார்ட் சிட்டி கருத்திட்ட முன் மொழிவு" க்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. 7. இலங்கையின் காலநிலை மாற்றங்களினாலான தாக்கங்கள் தொடர்பாக இயைபாக்கமடையும் தேசிய திட்டத்தின் கீழ் நிலை நாட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள "காலநிலை இயைபாக்க நிதியம்" ஐ நிலை நாட்டும் பொருட்டு தேசிய இயைபாக்கலை திட்டமிடும் பொருட்டான ஆயத்தமாக்கல் தொடர்பான கருத்திட்டத்தின் கீழ் அதனுடன் தொடர்புடைய அனைத்து ஆராய்ச்சிகளும் செயற்படுத்தப்பட்டுள்ளன.

பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தி
செயலாளர்